பதிவு எண்—M 5720. வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# மல்லிக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

775 ஆசிரியர் : இளவழகனார்.

கிளை–6 திருதலம், மாம்பாக்கம் ; விசய, கார்த்திகை; 20—11—53 தளிர்–5

## குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## கைம்மாறு எவ்வளவு?

செய்ந்நன்றி மறவாமைக்கு ஓர் அடிப்படைப் பண்பு இன்றியமையாத காரணமாய் இருக்கின்றது. அப் பண்பு, பொதுவாக, எல்லாவகையான நலங்களுக்குமே காரணமாய் இருப்பது என்று சொல்லலாம். போதுமென்ற நிறைவுள்ளந் தரும் அமைதிப் பண்பே அது! சால்பு அல்லது சான்றாண்மை என்பதும் அது.

பசி பிணி பகை முதலியன இல்லாமல் நெடுங்காலம் நலமுடன் பயனுண்டாக வாழ்ந்து விளங்குவதற்கும், பிறர்க்கு உதவியாயிருப்பதற்கும் இந்த அமைதிப் பண்பு ஒரு பெரு மருந்து! இடர்களைக் கடந்து வெற்றி பெறுவதற்கும், பிறர் குற்றங்களை மறந்து அவர்கள் தம் இடர்களைக் கடக்குமாறு செய்து அவர்களுக்கும் வெற்றி கூட்டுவிப்பதற்கும், எல்லாவற்றிற்கும் மேலாகத் தினையளவு உதவியைப் பனையளவாக மதித்து நிறைவுள்ளங் கொண்டு அதனினும் பேரளவாகக் கைம்மாறு செய்து நாட்டில் மகிழ்ச்சி நிலவவைப்பதற்கும் இப்பெருங்குணம் செய்யும் உதவி சொல்லத் தரமன்று!

பொதுவாகப், போதுமென்ற உள்ளத்தில் ஓர் அமிழ்தமே பொங்குகின்றதென்று சொல்லலாம்! தமது சூழலையும், சூழ உள்ளவர் துணையாயிருப்பவர் சூழலையும் பொன் செய்யும் மருந்தாகவே, இது, இருக்கின்றது!

இத்தகைய சிறந்த அமைதிப் பண்புடையார்க்கே, செய்ந்நன்றி மறவாமல் நடந்துகொள்ளும் பெருந்தன்மையும், அளவு சுருதாமல் கைம்மாறு செய்யும் பெருங்குணமும் பெருகியெழுவது இயல்பாய் இருக்கின்றது அல்லாதார்க்கு, எவ்வளவு பேருதவிகள் செய்தாலும் அவர்கட்கு அவை போதாமையாகவே தோன்றி நிறைவு தராமற் போதலால், உதவி செய்வாரிடத்தில் அன்பையும் மதிப்பையும் எழுப்பாமல் குறையையும் குற்றங்களையுமே கருதுமாறு செய்துவிடுகின்றன. நன்றி மறக்குங் குற்றத்திற்கும் இடமாக்கிவிடுகின்றது.

ஆகவே, கைம்மாற்றின் அளவு, பெற்ற பொருளின் அளவைப் பொறுத்ததன்று, பெற்றவரது பெருங்குணத்தின் அளவையே பொறுத்ததாய் இருக்கின்றது!

உதவி வரைத்தன் றுதவி;
உதவி செயப்பட்டார்
சால்பின் வரைத்து.

உதவி உதவி வரைத்து அன்று—திருப்பிச் செய்யும் கைமாறாகிய உதவி, முன்பு பெற்ற உதவியளவினது அன்று; உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து—உதவி செய்துகொள்ளப்பட்டவரது பண்பின் அளவினது!

முன் செய்யுள், உதவி செய்தவரது பெருமை கருதுமாறு வந்தது; இச் செய்யுள் உதவி பெற்றவரது பெருமை மிகுக்க எழுந்தது.

ஒருவர் தமக்கு ஓர் உதவிசெய்ய அதற்குக் கைம்மாறாகச் செய்யும் உதவி, முன்பு தாம் பெற்ற பொருளின் அளவையே பொறுத்ததன்று, தமது குணத்தின் அளவைப் பொறுத்ததே என்று கூறினார்.

எனவே, சால்புடையார்க்குச் செய்யப்படும் உதவி நன்றாகப் பயன்படும், மேம்படும் என்னும் உண்மையும் இதுகொண்டு தெளியப்படும்.

சால்பு, நிறைவுள்ளம்; நிறைவான பண்பு; என்றது, சான்றாண்மை; அதாவது பெருந்தன்மை!

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
**6-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(23-10-53 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| கிளை | விசய, கார்த்திகை, | தளிர் |
|---|---|---|
| 6 | 20-11-53 வெள்ளி | 5 |


## சட்டம் செய்யுமுன்?

அரசியலுக்குச் சட்டம் முதன்மையானது.

அது மக்களை ஒழுங்கு நெறியில் நிலைப்பிப்பது.

அதற்கு உட்படாதவர்களை ஒறுத்து, ஒதுக்கிவைத்து, ஒழுங்கில் நிறுத்துவதற்குரிய அதிகாரமும் அது செய்யப்படுகிறபோதே அரசாங்கத்துக்கு அளிக்கப் படுகிறது.

மன்னர் அல்லது ஒற்றை அதிகார ஆட்சியானால் தலைவர்களே மக்களுக்கு நல்லவை என்று தோன்றும் ஒழுங்குகளை ஒட்டிச் சட்டங்கள் செய்து அவற்றுக்கு மக்களைக் கட்டுப் படுத்தி நடக்கச் செய்யலாம்.

இப்போது நடைபெறுவது மக்களாட்சி; பெரும்பாலோர் விரும்புகிறபடி சட்டங்கள் உருவாகியும், அவைகள் திருத்தப் பட்டும் இயங்கவேண்டிய காலம்.

எனவே இக்காலத்தில் நன்மை யென்று தெளிவாகத் தெரியும் பொதுச் சீர்திருத்தச் சட்டங்களை அரசியல் கட்சித் தலைவர்கள் மட்டும் ஆராய்ந்தறிந்து நிறைவேற்றி விட்டால் போதாது. அவற்றின் இன்றியமையாமையையும் நன்மையையும் மக்கள் நன்றாக அறியுமாறு செய்யவேண்டும். செய்த பின் குறிப்பிட்ட ஒரு கட்சிச் செல்வாக்கால் மட்டுமன்றிப் பெருவாரியான மக்களின் ஆதரவைத் தெளிவாகப் பெற்றுக்கொண்டு சட்டத்தை உருவாக்கவேண்டியிருக்கிறது.

சட்டம் செய்யப்பட்ட பின் 'இனி ஒரு விதி செய்வோம் அதை எந்த நாளும் காப்போம்' என்றாற்போல, அதனைத் தக்கபடி நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும். வழுவுவோர் யாரானாலும் உரியபடி ஒறுக்க வேண்டும்.

ஒரு பொது நலச் சட்டத்தை நிறைவேற்றிவிட்டால் பிறகாவது அதன் நன்மைகளை மக்கள் நன்றாக உணரும்படி செய்ய வேண்டும். அதனில் வழுவுவோர்மேல் அரசாங்கம் அவ்வளவாக நடவடிக்கை எடுப்பதில்லை என்று எண்ணும்படி விடக் கூடாது. அப்படிச் செய்தால் அதனைப் பலர் மீறும்படி நேரும். நாளடைவில் அரசியலுக்கே இன்றியமையாத வேறு அடிப்படைச் சட்டங்களைக்கூட மக்கள் எளிதாக மீறும்படியான நிலை உண்டாகிவிடும்.

இத[illegible] எடுத்துக் காட்டுக்காக இப்போது நம் நாட்டிலுள்ள இரண்டு நிலைகளைக் குறிப்பிடலாம்.

ஒன்று மதுவிலக்கு, இன்னொன்று தீண்டாமை.

இவை இரண்டுமே மிகவும் நன்மை பயக்கக்கூடிய கட்டாயமான சீர்திருத்தச் சட்டங்கள் தாம். ஆனால், இவைகளை நம் நாட்டு மக்களின் கல்வி, பழக்க வழக்கம் முதலிய பல்வேறு நிலைகளைக் கருதிப் பார்த்து இன்னும் பல மடங்கு 'பிரசாரங்கள்' செய்து மக்களிற் பலர் இயல்பாகவே திருந்தியபின் கொண்டு வந்திருக்கவேண்டும்.

உரிமை கிடைத்ததும் சமாளிக்க வேண்டிய எத்துணையோ சிக்கலான நிலைகளுக்கிடையில், தலைவர்கள் தம் ஆர்வமிகுதியால், இவ்விரண்டைப் பற்றிய சடங்குகளைச் செய்து விட்டார்கள். உண்மையில் இவை இரண்டும் நடைமுறையில் சரியாகவே கவனிக்கப்பெறவில்லை.

பல சிற்றூர்ப் பகுதிகளில் தீண்டாமை இன்னும் பழைய நிலையிலேயே இருக்கிறது. இவ்விரு வகையிலும் சட்டம் மீறுவோர்க்கெல்லாம் தண்டனையளிப்பதென்றால் அதை நிறைவேற்றவே இயலாது போகும்.

எனவே மக்களாட்சியின் சீர்திருத்தச் சட்டங்களை உரிய சூழ் நிலைகளைப் பிரசாரத்தால் உண்டாக்கு முன் செய்யக் கூடாது; இல்லையேல், செய்த சட்டங்களை மீறுவதற்கு எந் நிலையிலும் இடந்தாக் கூடாது. அரசாங்கத்தின்பால் மக்களுக்கு மதிப்போ பொறுப்புணர்ச்சியோ உண்டாகாது. நாட்டில் அமைதியும் நிலைக்காது.

நிற்க, வேற்றவர் ஆட்சியை ஒழிக்கக் காந்தியடிகள் காட்டிய வழிகளில் இந்தச் சட்ட மீறுதற்

கொள்கை, நம் நாட்டு மக்களின் அறியாமை நிலையை நோக்க என்ன இருந்தாலும் குறைபாடுடைய ஒரு கொள்கையே.

சட்ட மீறுதல், சத்தியாக்கிரகம் இவைகளின் இன்றியமையாமை, மேன்மை முதலியவை அறிந்து காலமும் இடமும் பொருந்த அடிகளைப்போல் செய்யக் கூடியவர்கள் பலராக இருக்கமுடியாதல்லவா?

இப்போது எதற்கெடுத்தாலும் சட்டமீறுதல், சத்தியாக்கிரகம் என்று எங்கும் நடைபெறுகிறது. ஒரு குறிப்பிட்ட செயலில் தொடர்புடைய இரு சாராரும் கூட இவைகளை மேற்கொள்ளத் தொடங்கிவிடுகிறார்கள். இந்நிலைகளையெல்லாம் சமாளிப்பது எப்படி? ஆளுகின்றவர்கட்கு அதுவே பெரிய வேலையாய்விட்டிருக்கிறது.

எனவே அரசியலாளர்கள், சட்டமீறுதலுக்கு எந்த நிலையிலும் இடம் கொடுக்காமல் இருப்பதே நல்லது. அதோடு ஒரு குறிப்பிட்ட சட்டத்தைச் செய்யுமுன் அதற்குரிய நல்ல சூழலையும் உண்டாக்க வேண்டும் என்று தோற்றுகின்றது.

—ஒளி.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

# திராவிடக் கழகங்கள்

செல்வாக்குப் பெற்றுள்ளன. சடங்குகள் குருட்டுப் பழக்கங்கள் முதலிய குறைபாடுகளை நீக்கி மக்கள் வாழ்க்கையைச் சீர்திருத்த வேண்டுமென்றும், திராவிடர்கள் மொழியின்காரணமாக வடவர்க்கு அடிமைப்படக் கூடாதென்றும், பொருள் துறையில் வளர்ச்சியடையத் திராவிட நாடு இந்தியாவிலிருந்து பிரிய வேண்டுமென்றும்கழகத்தினர் கருதுகின்றனர்.

போலிச் சமயக் கொள்கைகளும், குருட்டுப் பழக்கங்களும் சடங்குகளும் திராவிட மக்களிடம் மலிந்திருப்பது உண்மையே. இத் தீமைகளால் கட்டுண்ட மக்கள் கடவுள் தொடர்பைக் காட்டி அவற்றை நிலைநிறுத்த முயல்வதால் கழகத்தினர், அவர்கள் குறிப்பிட்ட கடவுளர்களையே வெறுக்கத் தொடங்கினர். அதோடு கடவுள் என்ற உடனே அது ஆரியக் கற்பனை என்று எண்ணிப்பாராமல் முடிவு செய்கின்றனர். கடவுள் என்பது ஆரியார்கள் நம்மை ஏமாற்றுவதற்குத் திணித்த பண்டமன்று. மாறாகத் திராவிடர்களே முதன் முதலில் கடவுளுணர்ச்சியைப் பெற்று வழிபாட்டு முறைகளை வகுத்துக்கொண்டனரென்றும், இவர்கள் தொடர்பைப் பெற்ற பின்னரே ஆரியர்கள் கடவுளைப் பற்றி அறிந்தனரென்றும் ஆராய்ச்சியாளர்கள் பல சான்றுகளைக் கொண்டு முடிவு செய்துள்ளனர். எனினும், இன்று திராவிடர்களிடம் உலவும் சமயம் தூய்மையற்றதாகும். சமயத்திலுள்ள களைகளை அகற்றி, குருட்டுப் பழக்கங்கள் முதலிய தீமைகளைப் போக்க வேண்டுமானால், கடவுள் இலக்கணத்தை மக்கள் அறிந்து கொள்ளும்படி செய்ய வேண்டும். செய்தபின் போலிச் சமயக் கொள்கைகளும் அவற்றின் தீய விளைவுகளும் தாமே மறைந்துபோம். எனவே கழகங்கள் முழுமுதலைப் பற்றிய உண்மைகளை மக்களுக்கு உணர்த்துவதனால் மட்டுமே தாம் விரும்பும் சீர்திருத்தங்களைச் செய்ய முடியும்.

மொழி அடிமை பிற அடிமைகளுக்கு முதற்படியாதலால் திராவிட நாட்டின் உரிமையைக் காக்க இக் கழகங்கள் இந்தியை எதிர்த்தன. ஆனால் எதிர்ப்பினாலேயே இச் சிக்கல் தீரப்போவது இல்லை. இனி, திராவிடம் தனியே பிரிந்துவிட்டாலும் இந்திச் சிக்கலுக்குப் பதிலாகத் திராவிடநாட்டுக்கும் பொது மொழிச் சிக்கல் ஒன்று தோன்றிவிடும். இவ் விரு சிக்கல்களும் ஒரே தன்மையின. எனவே நாடு பிரிந்தாலும் பிரியாவிட்டாலும் இம் மொழிச்சிக்கலைத் தம் உரிமைக்கு இழுக்கின்றித் தீர்த்துவைக்கத் திராவிட இனத்தவர் வழிகாண வேண்டும். கழகங்கள் தென்னாட்டு அறிஞர்களை ஒன்று திரட்டி இதைப் பற்றிய தெளிந்த முடிவைக் காண வேண்டும். கீழே கொடுக்கப்பட்டுள்ள விடையும் எண்ணிப் பார்த்தற்குரியது. இந்திய மொழிகளெல்லாம் ஆரிய, திராவிட இன மொழிகளென்று இருபிரிவில் அடங்குகின்றன. இந்தியை நாட்டு மொழியாக்க விரும்புகிறவர் அது பெரும்பாலோரால் பேசப்படுவதனால் தெரிந்தெடுக்கப்பட்டதென்றும், பிறமொழி

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# மொழித் துறை

## * ஈரடி இருநூறு *

நூலாசிரியர் — திரு. சே. கோதண்டபாணி பிள்ளை அவர்கள் B. A.
(ஆசிரியர் அவர்களின் உரையுடன்)

### அதிகாரம் 7.

### அழகு

அஃதாவது பாட்டது கவர்ச்சிக் காரணங் கூறுதல். அவை மொழி பொருள் முதலியவற்றின் ஒழுங்கு, நலம், இனிமை முதலியன. பாட்டு, 'கலை'யெனப்படுதற்குரிய சிறப்புறுப்பாகலானும் இது பொருந்தாதவிடத்துக் கலையியல் நலம் முற்றுப் பெறுமையானும் ஈது இறுதிக்கண் நிறுத்தப்பெற்றது.

**1. ஒத்த ஒழுங்கும்
உளங்கவர்வும் உள்நெகிழ்வும்
முற்றக் கனிவ தழகு.**

உறுப்புக்கள் ஒன்றோடொன்று பொருத்தமாக ஒத்திருக்கும் ஒழுங்கும், உள்ளக் கவர்ச்சிக்குரிய அறிவாற்றலும், அகநெகிழ்ச்சிக்குரிய அன்பினிமையும் நிரம்பியமைய அவ்வாற்றாற் கனிந்து தோன்றுவது அழகாவதாம்.

ஒத்த ஒழுங்கென்றது நேரொத்த அமைவு; கவர்வும் நெகிழ்வும் தத்தங் காரணத்தின் மேனின்றன. முறையே இம்மூன்றும் புலனுக்கும் மனத்திற்கும் உயிருக்கும் விருந்தாதலின், இம்மூன்றற்கும் ஒருங்கே இன்பம் பயக்குமாறு கனிந்து தோன்றுவது 'அழகென்பதாயிற்று. நிரம்பிப் பதனுறுதலை முற்றக் கனிவதென்றார். இதனால் அழகின் இலக்கணங் கூறப்பட்டது.

**2. அழகென்ப மெய்ப் பொருள்
அப்பொருளே ஆயின்
அழகின்றி இல்லை பிற.**

உண்மை என்னும் ஒரு பொருளை அழகென்று கூறுவர். அம் மெய்ப் பொருள்தான் யாதோ என ஆராயின் அழகையன்றி வேறில்லை.

அழகே மெய்ப்பொருளென்றது என்ஞான்றும் அழியாததென்னும் பொருட்டு அழகு அழியாததென்பது இதனால் பெறப்பட்டது.

**3. மெள்ளப் புகுந்தறியா
துள்ளத்தைக் கொள்ளை கொள்
கள்ளம் உடைத்தாம் அழகு.**

மெதுவாகப் புலன்வழி நுழைந்து அயலறியாமல் மனத்தைக் கொள்ளை கொள்ளுங் களவு நெறியினை, அழகு உடையதாம்.

நன்றாக நெடுநேரம் நுகரும் பொருட்டுப் பைய நுகர்வாகலின் மெள்ளப் புகுந்தென்றும், அறிவு மறந்து உள்ளம் கொள்ளை போதலின் அவ்வறிவினை 'அறியா'தென்றுங் கூறினார். பழிப்பது போலப் புகழ்வார், 'கள்ளம் உடைத்'தென்றார். இதனால் அழகின் இயக்கமும் ஆற்றலும் இன்னவென்பது பெற்றாம்.

**4. நன்றென்ப வெல்லாம்
அழகென்ப நன்றல்ல
தொன்றும் அழகாவ தில்.**

நல்லதென்று சொல்லப்படுவனவெல்லாம் அழகாவன என்பர் உயர்ந்தோர்; நல்லதல்லாதது எதுவும் அழகாவதில்லை.

அழகென்றது நன்மையென்றபடி; முடிவு நன்மைதராததாயின் பிற நலங்களாற் சிறந்திருப்பினும் அழகாவதில்லையென்பது கருத்து. ஒன்றுமென்றது எஞ்சாமைப் பொருட்டு.

**5. அறியுங்கா லொன்றே
அழகும் அறிவார்
அறிவுபோல் வேறு படும்.**

அழகுதான் யாதென்றதனை அறியத் தொடங்கியவிடத்து அது குறிப்பிடப்பட்ட யாதானுமொன்றாகத் தோன்றுவதில்லை. பிறவற்றைப் போல அழகும் அறிவாரது அறிவின் வேறுபாட்டிற் கேற்ப வேறு வேறாகத் தோன்றும்.

ஓகாரம், எதிர்மறை. அறிவார் அறிவிற் கேற்ப அது வேறு வேறாகத் தோன்றுமாயினும், இயல்பில் ஒன்றென்று முடிக்கப்படுவதே யென்றற்கு ஒன்றென்னும் மொழியோடு அதனைப் புணர்த்தினர். உம்மை எச்சம். 'அறிவு போல்' என்றமையின் வேறுபாடு அறிவின்

கண்ணதே யென்பது பெற்றாம். இவை நான்கு பாட்டானும், அழகென்பது அழியாததாய், ஆற்றல் வாய்ந்ததாய், நன்மையாய், இயக்கத்திற் பல்வேறு தோற்றமுடையதாய், விளங்குகின்றதென்றும் அதன் மாட்சி விளக்கப்பட்டது.

**6. பொய்ம்மையை**
**உள்மறைக்கும்**
**போர்வை அழகன்று**
**மெய்ம்மைக்கே மேனி அழகு.**

பொய்ம்மை உள்ளிருக்க, அதனை மறைக்கும் மேற்போர்வையாகிய உடம்பு அழகன்று, அகத்திருக்கும் மெய்ம்மைக்குரிய போர்வையாகிய உடம்பே அழகாவதாம்.

மேனியெனப் பின் நின்றமையின் முன் நின்ற போர்வையென்றதும் அஃதாயிற்று. ஏகாரம் பிரிநிலை. பிரித்துக் கூட்டுக.

**7. மனமின்றிப் பூக்கும்**
**மலர்போலும் ஆன்ற**
**குணமின்றிப் போர்த்த அழகு.**

நிறைந்த பண்பு உள்ளத்தில் இல்லாமல் மேல் மூடிய உடம்பழகு, மணமின்றி இதழ் அழகாய்ப் பூக்கும் மலரை ஒக்கும்.

மதிப்பும் இன்பமும் அற்றதென்றபடி. குன்றாத குணமென்றது ஈண்டு ஆன்ற குணமெனப்பட்டது; அது தாழ்வுக்குரிய நோத்துந் தாழாது மாட்சிமையோடு நிகழ்தல்.

**8. அன்பகத்தில் இன்றேல்**
**அழகன்று காண்பார்க்குத்**
**துன்பாம் ஒளிகால் சுடர்.**

அகத்தில் அன்பில்லையாயின் ஒளியை உமிழும் ஞாயிற்றை ஒத்த புற உடம்பும் அழகாவதன்று; காண்பவர்க்குத் துன்பந் தரும் அழகில் பொருளேயாம்.

'ஞாயிறு கடற் கண்டாஅங்' கென்பவாகலின், ஈண்டுச் செஞ்சுடரெனப்பட்டது; உடம்புக்கு ஆகுபெயர் சிறப்புமையும் தேற்றேகாரமும் விகாரத்தாற் றொக்கன. ஏமாந்து கெடுதற்குக் காரணமாதலாலும், அன்பிற்கு வேறாகக் காமத்தை விளைத்துத் தீமைக்குக் கருவியாதலாலுந் 'துன்பாம்' என்றார். இச்செழுமையை வன்பாற்கண் வற்றல் மரந் தளிர்த்தற்று என்றார் பிறரும்.

**9. அலராமுன் காய்ந்த**
**அரும்பனைத்து அன்பால்**
**மலராமுன் கொள்ளும் அழகு.**

அன்பினால் உள்ளம் நிரம்பாமுன் மேலுடம்பில் மேற்கொள்ளும் அழகு, மணம் நிரம்பி மலராமுன் உலர்ந்தொழிந்த அழகிய அரும்பைப் போற் சீரழியும்.

நிலையா தென்பதாம். காய்ந்த அரும்பென்பதற்கு ஒளி வீசிய அரும்பென்றலும் ஒக்குமேனும், இறந்த காலத்தால் உரைக்கப்பட்டமையின் அதன் இன்மை பெறப்படுதலானும், மணம் நிரம்பாத அரும்புகள் தக்க மலர்ச்சி பெறாமல் இயல்பாகவே கெட்டொழிதலானும் இவ்வா றுரைக்கப்பட்டது.

**10. அகத்தழகு ஒன்றின்,**
**அழகும் அழகாம்;**
**முகத்தழகு மூப்பாற் கெடும்.**

உள்ளத்தே அழகு பொருந்தினால், புறத்தழகும் அழகாகத் தோன்றும்; அஃதின்றி முகத்தே பொருந்திய புற அழகு மூப்பினால் ஒரு காலத்திற் சிதைந்தழியும்.

அகத்தழகு ஒன்றுதலாவது அறிவு அன்பு இரக்கம் முதலிய பண்புகள் அமைதல்; 'மஞ்சளழகும் அழகல்ல நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையாற் கல்வியழகே அழ' கெனப் பிறர் கூறுதலுங் காண்க. புறத்து உறுதல் அழகெனப் பொதுவின் நினைக்கப்படுதலின் தாமும் அதனை அவ்வாறே கொண்டு 'அழகு' மெனவும், அகத்தழகால் அது மேலுமேலுஞ் சிறத்தலின் 'அழகா' மெனவுங் கூறினார். முகத்தழகென்றது, ஈண்டுப் புறத்தழகுக்குப் பொதுவினமைந்த ஒரு குறியீடு; இவை ஐந்து பாட்டானும் அகத்தழகு அழகுக்கு முதன்மையாதல் எதிர்மறை வகையாற் றெளிவிக்கப்பட்டது.


**Phone 55034. Tel. Enkayam**

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட்மார்க்

**பட்டாடைகளுக்கும்**
**நூலாடைகளுக்கும்**
**சிறந்த இடம்**

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

# * பண்ட மாற்று *

உலகம் இன்று இரண்டு பெரும்பிரிவில் நிற்கிறது. ஒன்று பொதுவுடைமைப் பிரிவு. மற்றொன்று தனி உடைமைப் பிரிவு.

முன்னது உருசியாவின் ஆட்சித் (Russia) தலைமையிலும் பின்னது அமெரிக்காவின் ஆட்சித் தலைமையிலும் ஒன்றை மற்றொன்று ஒழிக்க முயல்கின்றது.

இரண்டுமே குடியாட்சி முறை என்றும் குறிக்கப்படுகிறது.

"மக்களுக்குள் பல காரணங்களால் ஏற்றத்தாழ்வு மிகுதியாகிவிட்டது; பணக்காரர்கள் மேலும் மேலும் பணக்காரர்களாக ஆகின்றனர்; ஏழைகள் கீழ்க்கீழ் ஏழைகளாகி அழிகின்றனர்; இடையிலிருப்போர் இருவர்க்கிடையிலும் நெருக்குண்டு சங்கடப்படுகின்றனர்." கோடானுகோடி மக்கள் உண்ணவும் உணவின்றி வாட, ஒரு சில பேர் அவர்கள் உழைப்பை உறிஞ்சிக் கொழுக்கின்றனர்.

"எல்லாவகையான ஏற்றத்தாழ்வுக்கும் காரணம் தனிவுடைமை முறைதான்; இந்நிலை மாறப்பொருளைப் பொது உடைமையாக்கிவிட வேண்டும்; மக்கள் வாழ்க்கைப் பொறுப்புகள் எல்லாவற்றையும் பிறந்து வளர்ந்து கல்வியும் தொழிலும் கற்று, வேலை செய்து, தத்தம் திறமைக்கேற்ப உயர்ந்து வாழ்வதற்கான எல்லா வசதிகளையும் அரசாங்கமே செய்து கொடுக்கிற மாதிரி செய்துவிட வேண்டும், அப்போதுதான் ஏழை பணக்காரன் என்கிற பேதம் ஒழிந்துவிடும்; வேலையில்லை. பிச்சை எடுக்கிறோம் என்று கூறும் இழிநிலை இராது; உழைப்போர் உழைக்க ஒரு சிலர் உண்டு கொழுக்கும் நிலை மறையும்" என்று பொதுவுடைமைக் கொள்கையினர் சொல்லுகின்றனர்.

"பொதுவுடைமை ஏற்பாடு இயகையல்ல; மக்களுக்கே சிறப்பாக இருக்கின்ற உரிமை உணர்ச்சிக்கு அதில் இடமே இல்லை; மக்களின் தனித் தனித் திறமைகள் சிறப்பாகவளர அதில் வழியில்லை. பொருள் உரிமை இல்லாவிட்டால், மக்கள் ஒருவர்க்கொருவர் உதவியும், விரும்புகின்ற பெரிய அறங்களைச் செய்தும், தம் அன்பு இரக்கம் ஒப்புரவு முதலிய உயர் குணங்களை வளர்த்துக் கொள்ள முடியாமற் போகும்; எங்கும் மன்னராட்சியாகிய அடிமை வாழ்வு ஒழிந்து மக்களாட்சியாகிய உரிமை வாழ்வு மலர்ந்துவருகின்றபோது பொதுவுடைமைக்கு இடம் கொடுத்தால் அது மீண்டும் முழு அடிமை வாழ்க்கையிலேயே மக்களை நிறுத்துவதாக முடியும்" என்றெல்லாம் கூறிப் பொதுவுடைமைக் கொள்கையைத் தனிவுடைமைக் கொள்கையர் வன்மையாக எதிர்க்கின்றனர்.

இவ்விரண்டு பிரிவுக்கும் இடைப்பட்டதாகச் சமதர்மம் (Socialism) என்னும் பொருள் நிரவற் கொள்கையும் பேசப் பட்டுவருகிறது.

அதன் சார்பில் பணக்காரர்களின் சொத்துக்கள் அவர்களாகவே முன்வந்து கொடுக்கும் படி செய்தும் (நிலக்கொடை இயக்கம்) அரசாங்கச் சார்பில் பலவகை வரி (மரண வரி) விதிப்புகள் செய்தும் கவர்ந்து பொது மக்கள் நலங்கட்கும் ஏழைகளுக்கும் பயன்படுத்த வேண்டும் என்று வழி வகைகள் வகுக்கப் படுகின்றன.

பொருட் பொதுமையை உண்டாக்குவதென்பது எளிதன்று. அதற்குக் குருதி கொட்டும் புரட்சிகளும் நிகழக் காண்கின்றோம்.

இப்போதிருப்பது போன்றே தனி உரிமை முறை நீடிப்பதும் ஏழை மக்களின் ஆத்திரத்தைத் தூண்டி ஒழுங்கற்ற புரட்சி நிலையையும் உண்டாக்கி விடக்கூடும்.

எனவே இன்றைய நிலையில் இவ்விருவகைப் புரட்சி நிலைகளும் உண்டாகாதபடி தடுக்க ஏதேனும் செய்தே ஆகவேண்டும்.

பொருள் நிரவற் கொள்கை கையினர் கூறும் அறிவுரைகளும், வழி வகைகளும் செல்வர்களாலும் அரசாங்கத்தாலும் கொள்ளப்படவேண்டியவையே.

அவற்றோடு இன்னொரு கருத்தையும் கொள்ளலாம். பொருளாதார நிபுணர்கள் நன்றாக எண்ணித் திட்டங்கள் வகுத்து நாணயச் செலாவணி முறையை ஓரளவுக்குக் கட்டுப் படுத்திப் பண்டைய வழக்கப்படி, பண்ட மாற்று முறைகளைக் கொண்டு வந்து வளர்த்தால், இப் பொருள் நிரவற் கொள்கை எளிதாகவும் இயல்பாகவும் நிறைவேறும் என்று புலப்படுகிறது.

ஏற்றபடி திட்டங்கள் வகுக்கப்பட்டால் பொதுவாகச் செய்

# செல்வப் பயன் பெற்ற சீரியர்

செல்வர்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். ஆனால் எல்லாரும் செல்வர் பெற்ற பயனைப் பெறுகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. புதையல் காத்த பூதம் போலத் தாமும் துய்க்காமல் பிறர்க்கும் வழங்காமல் போகின்றவர்களும் இருக்கிறார்கள்.

இனி, அறநினைவுடையாரினும் பலர், இப்போது நம் நாட்டின் நிலைக்கு எவ்வகையான அறம் வேண்டும் என்று எண்ணிச் செய்வதில்லை.

பொதுவாக எக்காலத்தினும் சிறப்பாக இக்காலத்திலும் ஒரு நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழ அந் நாட்டு மக்களின் கல்வியறிவே பெருந்துணை செய்யும்.

இப்போது நம் நாடு பெரிதும் வறுமையுற்றிருக்கிறது என்றால் அதற்குரிய பல காரணங்களில் ஒரு பெருங் காரணம் நம் நாட்டு மக்களிற் பலர் கல்வியறிவில்லாமலிருப்பதே.

இந் நிலையில் உணவின்றி வாடும் ஏழை மக்கள் 'இலட்ச லட்சமாக' இருக்க அங்கங்கே நூற்றுக் கணக்கான, ஆயிரக் கணக்கான மக்களுக்கு இரண்டொரு நாட்கள் அறச்சோறு மட்டும் வழங்கிவிடுவதனால் என்ன பயன் ஏற்பட்டுவிடும்?

அப்படியே நாட்டு மக்களிற் பலர், கடவுட் பற்றில்லாமல் இருக்கிறார்கள் என்பதற்காகப் பெருஞ் செலவு செய்து அன்போடு அங்கங்கே விழாக்கள் மட்டும் செய்துவிடுவதால் என்ன பயன் உண்டாகிவிடும்?

இவ்வறங்களே கூடாது என்றோ, இவற்றால் நன்மை இல்லை என்றோ சொல்லவில்லை. இவற்றிற்குரிய பயன் உண்டு. ஆனால், இக்காலத்தில் இவ்வறங்களைவிட, மேலே கூறிய நிலைகளுக்கு மூல காரணங்கள் என்ன என்று அறிந்து அவைகளை நீக்க முயல்கிற அறங்களைச் செய்வதே பெரும் புண்ணியமும் பயனும் ஆகும் என்றே குறிப்பிட விழைகின்றேன்.

எனவே ஏழைகட்கு உதவ விழைவோர் கல்வித் துறையில் அவர்கட்கு உதவ முன்வர வேண்டும். இப்படியே கடவுட் பக்தியை வளர்க்க விழைவோர் சமயப் பிரசாரங்களுக்கு வசதி செய்து தர முன்வரவேண்டும்.

இவ்வகையில் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் பல ஆண்டுகளாகச் சங்கநூற் பெரும் புலவரும், சிந்தாந்தச் செஞ்ஞாயிறுமாகிய ஆசிரியர் இளவழகனார் அவர்களைக் கொண்டு நல்ல சமயப் பிரசாரத்தைச் செய்து வருகிறது.

ஆசிரியர் அவர்கள் இக்காலத்து இளைஞர்கள் [illegible] தெளியும் வகையில் கேட்கும் பல கேள்விகளுக்கும் ஏற்ற விடைகள் தருகிற முறையில் தம்முடைய விரிவுரைகளை நிகழ்த்தி வருகிறார்கள். அவர்கள் விரிவுரையால் திருந்திச் சிறந்த தெய்வ பக்தியும் ஒழுக்கமும் பெற்ற இளைஞர்கள் பலராவர்.

அண்மையில் கந்தர் சட்டியை ஒட்டி 7-11-53 முதல் 12-11-53 வரை திருக்கூட்டத்தார் குமரகுருபர அடிகள் அருளிய 'கந்தர் கலிவெண்பா' என்னும் நறுநூலுக்கு ஆசிரியர் அவர்களைக் கொண்டு விளக்கவுரை வழங்கச் செய்தார்கள். அவ்வுரையை அன்பர்கள் பலரும் இலவசமாகத் திரண்டு வந்து கேட்டுப் பயன்பெறும்படி செய்ய வேண்டும் என்பதற்காக முருகனடியார்களாக உள்ள செல்வர் சிலரை அணுகிப் பொருளுதவி செய்யும்படி கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் வேண்டுகோள் மேலே குறிப்பிட்டபடி காலத்திற்கேற்ற நல்ல வேண்டுகோள் என்று உணர்ந்து திரு. M. R. சம்பந்தம் (திருக்கூட்டச் செயலாளர்), திரு B. சுப்பிரமணியம் (மண்ணடி), திரு. வடிவேல் முதலியார் (வண்ணை), கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ் உரிமையாளர் (பந்தர்த் தெரு) திரு. மாரிமுத்து முதலியார் முதலிய செல்வர்கள் ஒவ்வொருவரும் செல்வத்துப் பயனே 'ஈதல்' என்னும் முதுமொழிப்படி ரூபா (60-) அறுபது செலுத்தி ஆதரவு செய்து செல்வம் பெற்ற பயனைப் பெற்றுச் சிறந்தார்கள். அன்பர்கள் வேறு சிலரும் தம்மால் இயன்ற ஆதரவு செய்தார்கள். காலத்துக்கேற்ற நல்ல செயலுக்குத் துணை செய்த அவர்கள் எல்லாருக்கும்

---

பொருள்களும் சிறப்பாக விளை பொருள்களும் எங்கும் பெருகுகின்ற நிலையும் இயல்பாக உண்டாகும்.

உழவும் தொழிலும் உயர்ந்தன என்னும் வாழும் கொள்கையும் மக்கள் உணர்வில் ஊறிச் செழிக்கும்; உலகமும் அமைதி நிலையை அடையும்.

—ந. ரா. ஆட்லரசு.

கந்தப் பெருமான் திருவருள் நிரம்பத் துணை செய்யும் என்பதில் ஐயமில்லை. அப் பெருமக்கள் அறுவருக்கும் தமிழிளைஞர்கள் சார்பில் எளியேனுடைய மனமார்ந்த நன்றியறிதலையும் வணக்கத்தையும் செலுத்த விழைகின்றேன். அவ்வப்போது இப்படி ஒரு சில செல்வர்கள் முன்வந்து அரிதாகத் தோன்றும் ஆசிரியர் போன்ற சான்றோர்களைத் தக்கபடி பயன்படுத்தி வகுப்புகளும் சொற்பொழிவுகளும் நடத்தி அவர்கள் செய்யும் தொண்டுகள் சிறக்கவும் அன்பர்கள் பலரின் அறிவு விளங்கவும் வழிச் செய்வது இந்தக் காலத்தில் செய்ய வேண்டிய அறங்களில் சிறந்தது என்னு பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

—தமிழ்ச் சிறுவன்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களை அடக்குதல் தம்முடைய நோக்கமல்லவென்றும் கூறுவர். ஆதிக்க உணர்ச்சி தமக்கில்லை என்பதும் பிற மொழிகளையும் இந்நாட்டில் ஒத்த உரிமை கொண்டனவென்றே தாம் மதிப்பது உண்மையானால், இந்தியை நாட்டு மொழியாக நாம் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அவர்கள் பிற மொழிகளை ஒத்த உரிமை கொண்டனவென்று மதிப்பதை எவ்வாறு நாம் அறிந்துகொள்ள முடியும்? முதலில் மொழி வழி மாகாணப் பிரிவுசெய்து அவ்வம் மாகாணத்தில் அதனதன் தாய் மொழி ஆட்சி இடம்பெற்றுவிட்டால், இதற்குத் தீர்வு தரும். இந்தியக் குடியரசில் சிறுபான்மையினர் மொழிகள் அடக்கப்படவில்லை என்பதற்கும், மொழியாதிக்கமின்றி நாட்டு மொழிச் சிக்கலைத் தீர்ப்பதற்கும் வழி எளிதாகும். வேறு வழி காணப்படாமையினால், இது இங்குக் குறிப்பிடப்பட்டது.

மொழிச்சிக்கல் தீர்ந்துவிடுமானால் திராவிட நாடு பிரியவேண்டுமென்பதற்குப் போதிய காரணங்கள் இல்லாமற் போம். பொருள் துறையில் திராவிடம் வளர்க்கப்படவில்லை என்றும், வடவரால் சுரண்டப்படுகிறதென்றும் கழகங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இப்பொழுது உண்மையாயினும் சில ஆண்டுகளில் இக் குறைபாடு நீங்கிவிடுமென்பதற்கு ஐயமில்லை. இனவேறுபாட்டைக் கொண்டு பிரிவினையை விரும்புவது திராவிடத்திற்கு நன்மை தருமென்பதற்கில்லை. ஒன்றே குலம் என்னும் தமிழர்களின் உயர்க்குறிக்கோளை அடைய முன்பதை முயன்றுவரும் இந்நாளில் இன அடிப்படையில் பிரிவினைக்கு முயல்வது விரும்பத்தக்கதன்று. பிரிவினை நிகழ்ந்தால் இந்தியாவும் திராவிடமும் சிறுசிறு நாடுகளாய் விடும். இவற்றினும் சிறிய நாடுகள் பல உலகில் இருப்பது உண்மையேயாயினும் அவை தம் அரசியல் பொருளியல் உரிமைகளை மறைமுகமாக இழப்பதைக் காண்கின்றோம். பல சிறு நாடுகள் வல்லரசுகளுக்கு அடங்கியோ, அஞ்சியோ, சார்ந்தோ வாழ்ந்து வருகின்றன. இவ்வாறன்றி, இந்நாடு முழு உரிமையோடு வளர்ந்து உலக அமைதிக்கும் வளர்ச்சிக்கும் உதவவேண்டுமானால் பிரிவினை உணர்ச்சியின்றி ஒற்றுமையைப் பெறவேண்டும். இதற்குத்திராவிடக் கழகங்களும் இந்திய ஆட்சியும் தம் போக்குகளில் மாற்றங் காணவேண்டும். (வெவ்வேறு இனத்தவர்களின் நாகரிகங்களை வளர்த்துக்கொள்ள மொழிவழி அமைப்பே போதுமானது.)

கழகங்கள் வெறுப்புணர்ச்சியை வளர்க்காமல் வடவரோடு கலந்து பேசித் தம் குறிக்கோள்களை அடைய வேண்டும்.

ஆட்சியிலிருப்பவர், கழகத்தினரைப் பகைவர் என்று பழித்துரைப்பது, அவர்கள் செயல்களை மடமை பொருந்தியவென்று இழித்துரைப்பது, அச்சுறுத்துவது ஆகிய செயல்களைச் செய்வதைவிடத் திராவிட மக்களின் நிலைமையையும், அவர்கள் உணர்ச்சியையும் புரிந்துகொண்டு அவற்றிற்கேற்ப நடந்துகொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக மக்கள் விருப்பப்படி 'தால்மியாபுரத்'தைக் 'கள்ளக் குடி' யாக்கியிருக்கவேண்டும். இவ்வாறு மாற்றுவது இந்திய ஆட்சிக்கு இழுக்கன்று; கடமையேயாகும். மக்கள் விருப்பத்தை நசுக்கப் பார்ப்பது குடியாட்சிக்கு முறையன்று; அது இயலவும் இயலாது.

கழகங்கள் வெறும் சீர்திருத்த இயக்கங்களா அல்லது அரசியற் கட்சிகளா என்பதைத் தெரிவித்து அதற்கேற்ப முறைப்படி, அன்பு முறையில் ஆக்கவேலைகளைச் செய்வதே அவை பணிசெய்ய விரும்பும் தமிழ் மக்களுக்கு நன்மை தருவதாகும்.

—மெய்கண்டான்.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; இ. ச. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அ )